# தேவனை அறிவது மெய்யாகவே சிறந்தது




## 1.1 படைப்பின் தேவன்

**வேத வசனம்:** **ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.**
*ஆதியாகமம் 1:1*

**அறிக்கை:** **தேவன் நம்மைப் படைத்தார். நாம் அவருக்குச் சொந்தமானவர்கள்**



**சத்தியம்:** உன்னதமான தேவன் அண்டத்திலுள்ள அனைத்தையும் உருவாக்கி அதனைக் கட்டுப்படுத்தி வருகிறார். மனிதர்களையோ தமக்குச் சொந்தமானவர்களாக இருப்பதற்காய் உருவாக்கினார். ஆகையால் நாம் அனைவரும் அவருக்கே சொந்தமானவர்கள்.

### வேத பகுதி: ஆதியாகமம் 1:1-27

**பாடம்** **1. தேவன் தமது வல்லமையுள்ள வார்த்தையாலே அனைத்தையும் உருவாக்கினார்:**
ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார். பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது. ஆழத்தின்மேல் இருள் இருந்தது என்று வேத புத்தகம் குறிப்பிடுகிறது.

தேவன் தம்முடைய வல்லமையுள்ள வார்த்தைகளால் வானத்தையும் பூமியையும் அவர் உருவாக்கினார். ”வெளிச்சம் உண்டாகக்கடவது” என்று அவர் சொல்ல வெளிச்சம் உண்டானது. “கர்த்தருடைய வார்த்தையினால் வானங்களும், அவருடைய வாயின் சுவாசத்தினால் அவைகளின் சர்வசேனையும் உண்டாக்கப்பட்டது”. ஆதியாகமம் 1:1-3, சங்கீதம் 33:6

**2. தேவன் மனிதரைத் தமது சொந்த சாயலில் உருவாக்கினார்:** வானங்களும் உலகமும் கர்த்தருக்குச் சொந்தமானதென்று வேத வசனம் குறிப்பிடுகிறது. “வானங்கள் உம்முடையது, பூமியும் உம்முடையது, பூலோகத்தையும் அதிலுள்ள யாவையும் நீரே அஸ்திபாரப்படுத்தினீர்”

தேவன் அனைத்தையும் படைத்தார். அவை அனைத்தும் எண்ணிக்கையிலடங்காதவைகள். மிக அருமையான வரிகுதிரை, நாம் நேசிக்கும் யானை போன்றவை. இவை அனைத்திலும் மனிதனுக்கு மிக அதிக மரியாதையைக் கொடுத்திருக்கிறார். காரணம் அவனைத் தமது சாயலைப்போலவும் தமது ரூபத்தைப்போலவும் அவனைப் படைத்திருக்கிறார். (சங். 89:11, ஆதியாகமம் 1:26,27)

**3. தேவனுடைய அன்பு ஆண்களுக்கும் பெண்களுக்கும் சொந்தமானது:** தேவன் மனிதரை அதிகம் நேசிக்கிறார் என்று வேதம் சொல்லுகிறது. தேவனுடைய அன்பு பொறுமையும், கனிவும் கொண்டது. “அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது. அன்புக்குப் பொறாமையில்லை. அன்பு தன்னைப் புகழாது, இறுமாப்பாயிராது’ சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும்”. அவர் நம்மை நேசிப்பதால், அவருடைய அன்பு நம்மை விசுவாசிக்கும், நம்மிடம் சிலவற்றை எதிர்பார்க்கும், நம்மைப் பாதுகாக்கும் என்பதை அறியலாம். (1 கொரிந்தியர் 13:4,7)

**4. மனிதர் தேவனை ஆராதிக்கவும், அவருக்குச் சேவை செய்யவும் வேண்டும்:**
வேதபுத்தகம் சொல்லுகிறது “நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார். நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம்.” ஆகையால் நாம் அவருக்கு மகிழ்வுடன் பணிவிடை செய்யவேண்டும். காரணம் அவரே நமது பரலோகத் தந்தை, நம்முடைய நித்திய ஆராதனைக்கும் மரியாதைக்கும் உரியவர். (சங்கீதம் 100:1-3)

**முடிவுரை:** தேவன் நம்மை அதிகம் நேசிப்பதால் நம்மை உண்டாக்கியிருக்கிறார். ஆகையால் நம்முடைய வாழ்க்கை அவருடையது. நாம் அவருடைய எதிர்ப்பார்ப்புக்கத் தக்க வாழ வேண்டும்.

**ஜெபம் / அழைப்பு:** இன்றைய சத்தியம் நமது இருதயங்களில் எழுதப்படும்படி இயேசுவின் நாமத்தினால் ஜெபியுங்கள்.